# காப்பியங்களில் யாக்கை நிலையாமை

*ஜெ. நித்ய சுபா*
இளங்கலை மூன்றாமாண்டுத் தமிழ், தமிழ்த்துறை
புனிதஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வெய்க்காலிப்பட்டி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.5281/zenodo.14958715

### முன்னுரை

நம் உடலானது நிலையானது, மேன்மையானது, என்று நினைத்து போட்டி பொறாமை கொள்கிறோம். ஆனால் இந்த உடலானது நிலையற்றது, இழிவானது என்று ஐம்பெரும் காப்பியங்களான குண்டலகேசி, வளையாபதி நூல்கள் கூறும் செய்திகளை கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

### குண்டலகேசி கூறும் ஊனும் உடம்பும்

இது நன்றாக நறுமணம் கமழ்கின்றது என்று பாராட்டி இந்த உடம்பு நம்மால் விரும்பப்படுகிறது. ஒன்பது வாயில்கள் தோறும் உள்நின்று அழுக்கு சொளிய அதனை தின்னும் இயல்பு நாய்கள் தம்முள் கலாம் கொண்டு வாயால் கவ்வி நாற்றிசைகளிலும் இழுத்தலாலே ' இந்த உடம்பில் இருந்து சீல்வடிகின்ற பொழுது, இவ்வுடம்பின் கண் மனம் இன்புறுவதற்கு காரணமான நறுமணத்தை எவ்வாறு தர முடியும். இச்செய்தியை,

**"நன்கணம் நாறும் இது என்று இவ்வுடம்பு நயக்கின்றது ஆயின**
**ஒன்பது வாயில்கள் தோறும் உன்நின்று அழுக்கு சொளிய**
**தின்பது ஓர் நாயும் இழுப்பது திசைதோறும் சீப் பில்கு போழ்தின்**
**இன்பநல் நாற்றம் இதன்கண் யாற்கொள்ள லாமே"**

**(குண்டல.பா. எ.13:9-12)**

என்னும் பாடல் வளியானது பதிவு செய்கின்றது. இவ்வுடலானது ஒன்பது வாயில்கள் தோறும் கழிவுகள் வெளியேற்றபட்டு தூர்நாற்றம் வீசக்கூடியது. அதனால் இதன் மீது ஆசை கொள்ள வேண்டாம் என்றும் வலியுறுத்துகிறது.

### உலகத்து மகளிர் மீது ஆண்கள் ஆசைகொள்ளுதல்

ஒன்றோடு ஒன்று வலமிடமாக மாறுபட்டு இருக்கின்ற இரண்டு மந்தர மலைகளே இவைகள் என்றும் பருத்த மரகத மணியாலியன்ற தூண்களே இவைகள் என்றும் கேட்போர் உணரும் படி ஆடவர்களுடைய தோள்களைக் குறித்து மகளிர் முறையே அவாவுவதனால் பருந்துகளும் நாய்களும் இவற்றை இரையாக தின்னுதற்பொருட்டு வாயால் கவ்வி கவ்வி இழுத்த காலத்திலே பருத்து திரண்ட வறுந்தசையின் கண் இந்த உலகத்து மகளிர் இன்புறுவதற்கு இயன்ற பண்பு எங்கே உள்ளது.

***"மாறுகொள் மந்தரம் என்றும் மரகதம் வீங்கு எழு என்றும் தேறிடத் தோள்கள் திறத்தே திறந்துளிகாமுற்றது ஆயின்பாறொடுநாய்கள் அசிப்பப் பறிப்பறி பற்றிய போழ்தின் மாறிய இத் தசைதன் மாட்டு இன்புறல் ஆவது இங்கு என்னோ"***

***(குண்டல. பா. எ 12:5-8)***

*இப்பாடல் மூலம் பெண்கள் மீது ஆசை கொள்ள கூடாது என்பதை வலியுறுத்துகிறது.*

**உடலமைப்பு**

*கால், கை முதலிய புற உறுப்புகளும் ஒரு சேர ஓர் உடம்பாக இருந்த இந்தத் தோலால் என்ற பெளிய பையானது மேலே தோல் போர்த்துள்ள மறைப்பினாலே நத்தம் அவாவிற்கு சார்பிடமாகி நம்மை மயக்கும் இயல்புடைய தென்னின் தன் உறுப்புகள் துணிக்கப்பட்டன.போல்வனவாக அழுகி நாளுக்கு நாள் தேய்ந்து வீழாநிற்ப வெறுப்பீற் கிடனாக் கிடந்த காலத்து இவ்வுடம்பின் கண் யாம் அவாவுதற்க்கு இயன்ற தன்மையும் உண்டாகுமோ!*

***''உறுப்புகள் தாம் உடன் கூடி ஒன்றாய் இருந்த பெரும்பை***
***மறைப்பில் விழைவிற்க்கு சார்வாய் மயக்குவ தேல் இவ் உறுப்பு***
***குறைத்தன போல் அழுகி குறைந்து குறைந்து சொளிய***
***வெறுப்பிற் கிடந்த பொழுதின்***
***வேண்டப்படுவதும் உண்டோ"***

***(குண்டல.பா. எ.13:9-12)***

*இவ்வாறாக இவ்வுடம்பானது அழுகி வெறுப்பை உண்டாக்கும் பண்பை உடையது என்பதை அறிய முடிகிறது.*

**உடலின் தன்மை**

*தீவினையாளே! என்னுடையது என்று யான் உளிமை கொண்டாடுதற்கு இடனாயிருத்தலே இந்த உடம்பு யான் இன்புறுவதற்குளியதாகும். இங்கு உன்னுடையதாலால் தான் எங்ஙனம்? திணை அரிசி பெய்து சமைக்கப்பட்ட சோறு போன்று உருவத்தாற் சிறியனவும் பெளியனவுமாய் கூர்ந்த வாயினை உடையனவாகிப் புழுக் கூட்டங்களாலே தம்முடையதாகவே கொண்டு வாழவும் படுகின்ற இத்தன்மையான இந்த உடம்பினை யான் என்றாதல் என்னுடையது என்றாதல் கூறுதல் கூடுமோ?*

***"எனதென சிந்தித்தால் மற்றும் இவ்வுடம்பு இன்பத்துக்கு ஆமேல்***
***தினை பெய்த புன்கத்தைப் போல சிறியவும் மூத்தவும் ஆகி***
***நுனைய புழுக்குலம் தம்மால் நுகரவும் வாழவும் பட்ட***
***இனைய உடம்பினை பாவி யான் எனது என்னல் ஆமோ"***

***(குண்டல.14:13-16ஸ)***

*நம் உடலானது நிலையானது அன்று ஒரு காலத்தில் புழுக் கூட்டங்களால் உண்ணக் கூடிய இழிவு நிலைமை உடையது என்று வலியுறுத்தப்பட்டது.*

**வளையாபதி கூறும் ஊனும் உடம்பும்**

*பொய் கூறாதீர்கள்,புறம் கூறாதீர்கள், எத்தகையோரையும் இகழ்ந்து கூறாதீர்கள்' பிறவற்றின் உயிரை கொன்று அவற்றின் ஊனையுண்டு உங்கள் வாழ்நாளை வீணாக்கிக் கொள்ளாதீர்கள் கயமாக்களோடு கேண்மை கொள்ளாதீர்கள்.*

***"பொய்யன் மின் புறம் கூறன் மின்ச***
***யாரையும் வையன் மின் வடி வல்லன***
***சொல்லி நீர் உய்யன் மின் உயிர் கொன்று***
***உண்டு வாழும் நாள் நள்ளன் மின்' பிறர்***
***பெண்ணோடு நண்ணன் மின்"***

***(வளை.பா. எ-13)***

*இதன்மூலம் ஊன் உண்ணுதல் குற்றமாக அறிய முடிகிறது.*

**ஊன் உண்ணுதலின் செயல்கள்**

*ஊன் உண்ணும் அவாவினாலே அதனை விலை கொடுத்து வாங்கி தின்பவனும் அந்த ஊனுணவு நாடோறும் மிகுதியாக பாரு தலையே விரும்புவான் தான் விலையில் பிடித்த விலங்குகளே தனக்கு உணவாகவும் அத்துணையின்*

அமைதியுறாமல் மேலும் விலைபொருள் பெறுகின்ற அவாக் காரணமாக பிறவுயிளினங்களை கொன்று அவற்றின் ஊன்களை கொணர்ந்து விற்பவனும் அவ்விடத்து அவ்வுன் மிகுதியும் கிடைப்பதையே விரும்புவான். ஆதலால் உயிரை கொல்பவனிடத்துப் போலவே தீவினை இவர்கள் இடத்து மிகுவதாம். ஆகவே விலைப்பாலின் ஊன் கொண்டு ண்ணலை அறவோர்க்கு தகாத செயலாம்.

**''தகாது உயிர் கொல்வானின் மிகாமைஇலை**
**பாவம் அவாவிலையில் உண்பான் புலால்பெருகல்**
**வேண்டும் புகாவலை விலங்காய்ப் பொறாது**
**பிற ஊன்கொன்று அவாவிலையில் விற்பானும்**
**ஆண்டு அதுவே வேண்டுமால்''**

***(வளை. பா.எ-18)***

இப்பாடல் மூலம் உயிரை கொல்பவன் போலவே ஊனை உண்பவனும் அத்தகைய குற்றத்திற்கு ஆளாவான் என்பதை அறிய முடிகிறது.

**ஊன் உண்ணாதவன் நிலை**

எல்லா உயிர்களையும் அருள் கூர்ந்து காப்பாற்றுவீராக, பிறவுயிளினங்களின் ஊனை விரும்பி உண்ணற்க செற்றம் இகந்து ஓரீஇ வெகுளியை துவர விலக்கி காம முதலிய குற்றங்களினின்று நீங்கி வாழ்வீராக் கதிகள் நல்லுருக் கண்டனிர் இவ்வாறு வாழ்வீராயின் மேல்வரும் பிறப்புகளில் மேனிலையுலகங்களிலே தேவர் முதலியோராய் தொழுகின்ற குளிர்ந்த நிறை திங்கள் போன்று குற்றமில்லாதவர்களாய் அருள் நிரம்பிய புகழோடு விளங்குவீர்.

**''உயிர்கள் ஓம்புமின் ஊன்விழைந்து உண்ணன்மின்**
**செயிர்கள் நீங்குமின் செற்றம் இகந்துஓரீஇக்**
**கதிகள் நல்லுருக் கண்டனர் கைதொழு**
**மதிகள் போல மறுவிலிர் தோன்றுவீர்''**

***(வளை - பா. எ.20)***

இப்பாடல் மூலம் ஊன் உண்ணாதவர்கள் குற்றமில்லாதவர்களாக பெறும் புகழோடு வாழ்வார்கள் என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

மனிதன் ஊனை உண்டே தன் உயிரை வளர்க்கிறான். ஊனை உண்ணுவதையே விரும்புகிறான். ஆனால் வளையாபதி மற்றும் குண்டலகேசி போன்ற நூல்கள் ஊன் உண்ணுபவர்களை குற்றமுள்ளவர்களாகவும் ஊன் உண்ணுதல் தகாத செயல் என்றும் வலியுறுத்துகிறது .

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" - என்கிறார் திருமூலர். எனவே ஊனுடம்பை ஆலயமாக எண்ணி ஊன் உண்ணுவதை தவிர்க்க வேண்டும்.

**மேற்பார்வை நூல்கள்**

1. வளையாபதி, குண்டலகேசி மூலமும் உரையும், உரை:முனைவர் கே. இரா. கமலா முருகன்